செ. கு. எண்: 006 நாள் : 05.01.2016

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 5.1.2016

11.11.2015 அன்று ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் வட்டம், கொளப்பலூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. சென்னியப்பன்;

21.11.2015 அன்று திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், மேட்டுப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. காமராஜ் ;

2.12.2015 அன்று தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், உத்தமபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. பெருமாள்;

4.12.2015 அன்று திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், பாடிபுது நகரைச் சேர்ந்த திரு. ரஞ்சன்;

-- ஆகிய தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத் தொழிலாளர்கள் பணியிலிருக்கும் போது மின்சாரம் தாக்கியதில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

6.11.2015 அன்று விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டம், ஊராங்கானி கிராமத்தைச் சேர்ந்த திரு. கந்தன் என்பவரின் மகள் முத்துலட்சுமி தேள் கடித்ததில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

20.11.2015 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், ஆத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. நடராஜன் என்பவரின் மனைவி அகிலாண்டம் பாம்பு கடித்ததில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

12.11.2015 அன்று மதுரை மாவட்டம், அவனியாபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. பெருமாள் என்பவரின் மகன் முத்து:

14.11.2015 அன்று திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், மூவர்கோட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு. வடிவேல் என்பவரின் மகன் நெடுமாறன்;

22.11.2015 அன்று தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் வட்டம், மருதக்குடி கிராமத்தைச் சேர்ந்த திரு. சவரிமுத்து என்பவரின் மனைவி தாமஸ்மேரி;

26.11.2015 அன்று விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், ஒலக்கூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. பெருமாள் என்பவரின் மகன் அருள்;

17.12.2015 அன்று வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், அம்பலூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஆனந்தன் என்பவரின் மனைவி ராமு;

28.11.2015 அன்று திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கூடங்குளம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ரத்தினசாமி என்பவரின் மகன் ஜோதி மணிகண்டன், திரு. செல்ல நாடான் என்பவரின் மகன் பிரகாஷ்;

–– ஆகியோர் மின்சாரம் தாக்கியதில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

பல்வேறு நிகழ்வுகளில் மேற்கண்ட தேதிகளில் உயிரிழந்த இந்த **13** நபர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**